# மணப்பாறை நகராட்சி

**2022- ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் (20.10.2022) 20 – ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு அறிஞர் அண்ணா நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் விபரம்**

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள்</th><th>தீர்மானம்</th></tr>
<tr><td>20.10.2022</td><td>

**பொருள் – 1**

தூய்மை இந்தியா திட்டம் 2.0 (SBM-U2.0)-ன் கீழ் மணப்பாறை நகராட்சியில் தனிநபர் கழிப்பிடம் கட்டும் தலைப்பின் (IHHL) கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5990/2022/SBM. நாள்.11.04.2022 மற்றும் ந.க.எண்.18856/2022/தூஇதி2, நாள்.13.07.2022-ன்படி, கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

(ரூ.இலட்சத்தில்)

<table>
<tr><th>ஒதுக்கீடு வருடம்</th><th>தனிநபர் கழிப்பறை கட்டுதல் - ஒதுக்கீடு</th><th>மதிப்பீட்டுத் தொகை</th><th>மத்திய அரசின்மான்யம் பங்குத் தொகை ரூ.4000 / 1 எண்ணிக்கை</th><th>மாநில அரசின்மான்யம் பங்குத் தொகை ரூ.2666 / 1 எண்ணிக்கை</th><th>நகராட்சியின் பங்குத் தொகை ரூ.2666 / 1 எண்ணிக்கை</th></tr>
<tr><td>2021-22</td><td>85</td><td>25.50</td><td>3.40</td><td>2.27</td><td>2.27</td></tr>
<tr><td>2022-23</td><td>110</td><td>33.00</td><td>4.40</td><td>2.93</td><td>2.93</td></tr>
<tr><td>கூடுதல்</td><td>195</td><td>58.50</td><td>7.80</td><td>5.20</td><td>5.20</td></tr>
</table>

மேற்கண்ட திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேற்படி திட்டத்தின் கீழ் நகராட்சியின் பங்குத் தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1005/2021/எச்1)

</td><td>

**தீர்மான எண்.28**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

</td></tr>
</table>

20.10.2022

**பொருள் – 2**

நமக்கு நாமே திட்டம் 2021-22 ன் கீழ் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு கடித.ந.க.எண்.27519-50/2021/P2 நாள்.25.08.2022–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு தொகை (ரூ.இலட்சம்)** | **NNT-21-22 மான்ய தொகை (ரூ.இலட்சம்)** | **பொது மக்கள் பங்களிப்பு தொகை (ரூ.இலட்சம்)** |
|---|---|---|---|---|---|
| 1. | நமக்கு நாமே திட்டம் (2021–22) | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 9 எண்ணிக்கையில் (150W) **Mini Highmast light** 12M உயர மின்கோபுர விளக்குகள் அமைக்கும் பணி | 38.50 | 25.67 | 12.83 |

**<u>அலுவலககுறிப்பு:-</u>**

மன்றம் பதிவு செய்யலாம்

**(ந.க.எண் : 00527/2022/இ1)**

**தீர்மான எண்.29**
**அலுவலகக்குறிப்பு பதிவு செய்யப்பட்டது**
திருமதி.மு.வசந்தா தேவி 14 வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது

20.10.2022

**பொருள் – 3**

மணப்பாறை நகராட்சி **1**முதல் **27** வார்டுகளில் உள்ள மின்விசைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை நீக்குதல்,புதிதாக மாற்றி தருதல், பேனல்போர்டுகள், சர்வீஸ் கேபிள், சப்மெர்சிபிள் கேபிள் மற்றும் Column pipe பழுது நீக்குதல் மற்றும் புதிதாக மாற்றுதல் பணிகள் மற்றும் இதர பணிகள் செய்வதற்கு ரூ.**9.95/-** இலட்சத்தில் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானஎண்.**27** நாள்.**22.09.2022**ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணியைய் செய்வதற்கு **14.10.2022** ம் தேதி மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

**தீர்மான எண். 30**
**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.D.ஜேம்ஸ்<br>ஒப்பந்தக்காரர், பொத்தமேட்டுப்பட்டி,மணப்பாறை | 0.005% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.ஏ.குழந்தைவேல் ,<br>ஒப்பந்தக்காரர், மணப்பாறை | 0.66% மதிப்பீட்டை விட கூடுதல் |

எனவே மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **திரு.D.ஜேம்ஸ்,ஒப்பந்தக்காரர், பொத்தமேட்டுப்பட்டி .மணப்பாறை**. அவர்கள் 0.005% மதிப்பீட்டை விட குறைவாக இருப்பதால் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணி செய்வதற்கான செலவினத்தொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்
3. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கி திரு.D.ஜேம்ஸ், ஒப்பந்தக்காரர் மணப்பாறை அவர்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்: 1174/2022/இ1)**

---

20.10.2022

**பொருள் – 4**

மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் 300 க்கும் மேற்பட்ட ஆழ்துளை குழாய் கிணறுகள் மூலம் குடிநீர் அல்லாத பயன் பாட்டிற்கு பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது,

மேற்படி ஆழ்துளை கிணறுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்கவும் மணப்பாறை நகராட்சி 1 முதல் 27 வார்டுகளில் உள்ள மின் விசைபம்புகளில் இருந்து நீட்டிப்பு செயய்யப்பட்ட குழாய்கள், சின்டெக்ஸ் டேங்க் பெட், சின்டெக்ஸ் டேங்கில் ஏற்படும் பழுதுகள் மற்றும் உடைப்புகளை சரி செய்தல் மற்றும் புதிதாக மாற்றுதல் பணி மற்றும் இதர பணிகள் செய்வதற்கு ரூ.9.50/- இலட்சத்திற்கு உத்தேச மதீப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பணியைய் செய்வதற்கு 14.10.2022ம் தேதி மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.D.ஜேம்ஸ்<br>ஒப்பந்தக்காரர், மணப்பாறை | 0.008% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.ஏ.குழந்தைவேல் ,<br>ஒப்பந்தக்காரர்,மணப்பாறை | 1.72 % மதிப்பீட்டை விட கூடுதல் |

**தீர்மான எண். 31**
**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

<table>
<tr>
<td></td>
<td>எனவே மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.D.ஜேம்ஸ்,ஒப்பந்தக்காரர், மணப்பாறை. அவர்கள் 0.008% மதிப்பீட்டை விட குறைவாக இருப்பதால் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:-</u><br>1. மேற்படி பணியை செய்வதக்கு நிர்வாக அனுமதி மன்றம் வழங்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் பணி என்பதால் பொது மக்களின் நலன் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணியை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்<br>3. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கி திரு.D.ஜேம்ஸ்,ஒப்பந்தக்காரர் மணப்பாறை அவர்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்<br>4. பணி செய்வதற்கான செலவினத்தொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>(ந.க.எண்: 1174-2/2022/இ1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>20.10.2022</td>
<td>பொருள் – 5<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் 300 க்கும் மேற்பட்ட ஆழ்துளை குழாய் கிணறுகள் மூலம் குடிநீர் அல்லாத பயன் பாட்டிற்கு பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது,<br>மணப்பாறை நகராட்சி 1 முதல் 27 வார்டுகளில் உள்ள 8 மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியில் இருந்து விநியோகம் செய்யபடும் அணைத்து குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகள், கசிவுகள், மற்றும் வாழ்வுகளில் ஏற்படும் பழுதுகளை நீக்குதல் மற்றும் புதிதாக மாற்றுதல் பணி மற்றும் இதர பணிகள் செய்வதற்கு ரூ.9.40/- இலட்சத்திற்கு உத்தேச மதீப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>மேற்படி பணியைய் செய்வதற்கு 14.10.2022ம் தேதி மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.D.ஜேம்ஸ்<br>ஒப்பந்தக்காரர், மணப்பாறை</td><td>0.007% மதிப்பீட்டை<br>விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.ஆர்.ஏ.குழந்தைவேல் ,<br>ஒப்பந்தக்காரர், மணப்பாறை</td><td>0.14% மதிப்பீட்டை<br>விட கூடுதல்</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண். 32<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | எனவே மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **திரு.D.ஜேம்ஸ்,ஒப்பந்தக்காரர், மணப்பாறை**. அவர்கள் **0.007%** மதிப்பீட்டை விட குறைவாக இருப்பதால் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>1. மேற்படி பணியை செய்வதக்கு நிர்வாக அனுமதி மன்றம் வழங்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் பணி என்பதால் பொது மக்களின் நலன் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணியை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்<br>3. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கி திரு.**D.**ஜேம்ஸ்,ஒப்பந்தக்காரர் மணப்பாறை அவர்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்<br>4. பணி செய்வதற்கான செலவினத்தொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>**(ந.க.எண்: 1174-1/2022/இ1)** | |
| 20.10.2022 | **பொருள் – 6**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதார பணியாட்கள் மூலமாக நகர்பகுதியில் உள்ள குப்பைகளை சேகரித்து பிரித்து கையாண்டு வருகின்றனர். மேற்படி குப்பைகளில் வரும் பயன்படுத்தப்பட்ட சானிட்டரி நாப்கின்கள் முறையாக அழித்திட இரண்டு சானிட்டரி நாப்கின் எறிப்பான் இந்திரங்கள் வாங்கப்பட்டு இருப்பில் உள்ளது.<br>மேற்படி இயந்திரத்தை **(MCC)** வாளகத்தில் பொருத்துவதற்கு அறை கட்டிடவும் இயந்திரத்திலிருந்து வரும் புகையை வெளியேற்றுவதற்கு புகை போக்கியுடன் கூடிய அறை கட்டவும்,வளகத்தில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தண்ணீர் வசதி செய்வதற்கு அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. செலவினத்தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>(ந.க.எண். 1931/2022/இ1) | **தீர்மான எண். 33**<br>**அலுவலகக்குறிப்பு**<br>**<u>அனுமதிக்கப்பட்டது</u>**.<br>திருமதி.மு.வசந்தா தேவி 14 வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது |

20.10.2022

**பொருள் – 7**

இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களில் உள்ள புதிய பேருந்து நிலைய பெண்கள் கட்டண கழிப்பறை வசூல் செய்து கொள்ளும் குத்தகை உரிம இனத்திற்கு 28.08.2018 முதல் 10 முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள ஒருவரும் முன்வரவில்லை. மேலும் மேற்படி இனத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 21.09.2022–ம் தேதியன்று நடைபெற்றது.

மேற்படி குத்தகை இனத்திற்கான ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை. ஏலத்தில் கீழ்க்கண்ட இரண்டு நபர்கள் கலந்து கொண்டு ஏலக்கேள்வி தொகை கோரியுள்ளனர்

| **வ.எண்** | **ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர்/முகவரி** | **ஏலக்கேள்வி தொகை (ரூ. )** | **ஒப்பந்தப்புள்ளித் தொகை** |
|---|---|---|---|
| 1. | திரு.எஸ்.பெரியசாமி, த/பெ.சுப்பையா, க/எண்.6/18B, மஞ்சம்பட்டி (வழி), மணப்பாறை. | ரூ.3,30,000/- | - |
| 2. | திரு.தெ.ராஜா, த/பெ.தெய்வம்,10 அங்காள ஈஸ்வரியம்மன் கோவில் தெரு,பெரியகோட்டை (அஞ்சல்), சிலுவத்தூர் (வழி) பிள்ளமநாயக்கன்பட்டி, திண்டுக்கல் | ரூ.3,50,000/- | - |

மேற்கண்ட ஏலக்கேள்வியை திரு.தெ.ராஜா, திண்டுக்கல் என்பவர் உச்சபட்ச ஏலக்கேள்வி தொகை **ரூ.3,50,000/–**க்கு கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மேற்படி குத்தகை இனத்திற்கு 10 முறை பொது ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டு யாரும் ஏலம் எடுக்க முன்வராத நிலையில் துறை மூலமாகவே வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதில் துறை மூலமாக 2018-19 ஆம் நிதியாண்டில் 23.10.2018 முதல் 31.03.2019 வரை துறை மூலம் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.1,36,000/- 2019-20 ஆம் நிதியாண்டில் துறை மூலம் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.2,87,280/- 2020-21 ஆம் நிதியாண்டில் துறை மூலம் வசூல் செய்யப்பட்ட தொகை

**தீர்மான எண். 34**
**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

<table>
<tr><td></td><td>ரூ.3,09,168/-  2021-22 ஆம் நிதியாண்டில் துறை மூலம் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.3,14,991/- 2022-23 நிதியாண்டு முதல் 30.09.2022 வரை துறை மூலம் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.2,03,689/- வசூலிக்கப்பட்டுள்ளது. மேற்படி உரிமத்திற்கு துறை வசூலுக்கென மாற்றுப்பணி அடிப்படையில் இரண்டு துப்புரவு பணியாளரை நியமனம் செய்யப்பட்டுள்ளதில் அதற்கான ஊதியம், மேற்படி இனத்திற்கான மின்கட்டணம், ரசீது புத்தகம் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் துறை மூலம் மேற்கொள்ளப்படுவதால் ஆண்டிற்கு சராசரியாக ரூ.5,66,000/- செலவாகிறது. எனவே மேற்படி இனத்திற்கு துறைமூலம் வசூல் செய்யப்படும் தொகையை விட கூடுதலாக ஏலம் கோரியதாலும், நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பைத் தவிர்க்கும் பொருட்டும் திரு.தெ.ராஜா, த/பெ.தெய்வம், திண்டுக்கல் என்பவர் கோரியுள்ள உச்சபட்ச ஏலத்தொகை ரூ.3,50,000/—யை மன்றம் ஏற்கலாம்.</td><td></td></tr>
<tr><td>20.10.2022</td><td>பொருள் – 8<br>இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களில் உள்ள பார்க் ரோடு ஆடு அடிக்கும் இடத்தில் கட்டண கழிப்பிடம் வசூல் செய்து கொள்ளும் குத்தகை உரிம இனத்திற்கு 10.02.2021 முதல் 6 முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள ஒருவரும் முன்வரவில்லை. மேலும் மேற்படி இனத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 21.09.2022-ம் தேதியன்று நடைபெற்றது.<br>மேற்படி குத்தகை இனத்திற்கான ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை. ஏலத்தில் கீழ்க்கண்ட இரண்டு நபர்கள் கலந்து கொண்டு ஏலக்கேள்வி தொகை கோரியுள்ளனர்.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர்/முகவரி</th><th>ஏலக்கேள்வி தொகை (ரூ)</th><th>ஒப்பந்தப்புள்ளித் தொகை</th></tr>
<tr><td>1.</td><td>திரு.எஸ்.பெரியசாமி, த/பெ.சுப்பையா, க/எண்.6/18B, மஞ்சம்பட்டி (வழி), மணப்பாறை.</td><td>ரூ.2,25,000/-</td><td>-</td></tr>
<tr><td>2.</td><td>திரு.தெ.ராஜா, த/பெ.தெய்வம்,10 அங்காள ஈஸ்வரியம்மன் கோவில் தெரு,பெரியகோட்டை (அஞ்சல்), சிலுவத்தூர் (வழி) பிள்ளமநாயக்கன்பட்டி, திண்டுக்கல்</td><td>ரூ.2,65,000/-</td><td>-</td></tr>
</table></td><td>தீர்மான எண். 35<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>மேற்கண்ட ஏலக்கேள்வியை திரு.தெ.ராஜா, திண்டுக்கல் என்பவர் உச்சபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.2,65,000/-க்கு கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக்குறிப்பு:</u><br><br>மேற்படி குத்தகை இனத்திற்கு 6 முறை பொது ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டு யாரும் ஏலம் எடுக்க முன்வராத நிலையில் துறை மூலமாகவே வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதில் துறை மூலமாக 2021-22 ஆம் நிதியாண்டில் துறை மூலம் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.3,06,838/- 2022-23 நிதியாண்டு முதல் 30.09.2022 வரை துறை மூலம் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.1,77,302/- வசூலிக்கப்பட்டுள்ளது. மேற்படி உரிமத்திற்கு துறை வசூலுக்கென மாற்றுப்பணி அடிப்படையில் இரண்டு துப்புரவு பணியாளரை நியமனம் செய்யப்பட்டுள்ளதில் அதற்கான ஊதியம், மேற்படி இனத்திற்கான மின்கட்டணம், ரசீது புத்தகம் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் துறை மூலம் மேற்கொள்ளப்படுவதால் ஆண்டிற்கு சராசரியாக ரூ.5,66,000/- செலவாகிறது. எனவே மேற்படி இனத்தை செயல்படுத்துவதற்கு ஆகும் கூடுதல் செலவினத்தை கருத்தில் கொண்டும் நிர்வாக நலன் கருதியும் நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பைத் தவிர்க்கும் பொருட்டும் திரு.தெ.ராஜா, த/பெ.தெய்வம், திண்டுக்கல் என்பவர் கோரியுள்ள உச்சபட்ச ஏலத்தொகை ரூ.2,65,000/-யை மன்றம் ஏற்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>20.10.2022</td>
<td>பொருள் – 9<br>இந்நகராட்சிக்கு சொந்தமான ஒன்பதாண்டு குத்தகை இனங்களில் உள்ள பர்மா பெட்டி கடை எண்.4 ஒப்படைக்கும் காலம் முதல் ஒன்பதாண்டுகள் வரை அனுபவிக்கும் குத்தகை இனத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 22.09.2022–ஆம் தேதியன்று நடைபெற்றது.<br>மேற்படி குத்தகை இனத்திற்கான ஏலத்தில் எவரும் கலந்துகொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட இரண்டு நபர்கள் கலந்து கொண்டு தொகை கோரியுள்ளனர்.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் பெயர்/முகவரி</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ.)</th></tr>
<tr><td>1.</td><td>திரு.C.லெட்சுமணன், C/o V..உஷா ராணி, 20J, அழகிரிசாமி தெரு, மணப்பாறை.</td><td>ரூ.5,501/-</td></tr>
<tr><td>2.</td><td>திரு.C.ராமன் C/o V..உஷா ராணி, 20J, அழகிரிசாமி தெரு, மணப்பாறை.</td><td>ரூ.5,300/-</td></tr>
</table></td>
<td>தீர்மான எண். 36<br>மறு ஏலம் கோர தீர்மானிக்கப்பட்டது.<br>திருமதி.மு.வசந்தா தேவி 14 வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மேற்படி இனத்தின் கடைக்கு அருகிலுள்ள தனியார் கடைகளின் சந்தை அங்காடி மதிப்பு, நகராட்சியின் மற்ற பர்மா கடைகளின் மதிப்பைக்காட்டிலும் மற்றும் அரசின் வாடகை நிர்ணய தொகையினை விடவும், திரு.C..லெட்சுமணன், மணப்பாறை என்பவரின் மாத வாடகை ரூ.5,501/– ஒப்பந்தப்புள்ளியில் கோரியுள்ளதை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம் | |
| 20.10.2022 | **பொருள் – 10**<br>மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட மனமகிழ்மன்றம் உள்ள சர்வே எண் - 584/5 பரப்பளவு 1.22 ஏக்கர் இடத்தில் மருங்காபுரி ஜமீன்தாரால் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் நினைவாக தனது சொந்த நிதியில் இருந்து வாசிப்பு சாலை கட்டியிருந்தார். அந்த வாசிப்பு சாலை சரஸ்வதி விலாஸ் வாசிப்பு சாலை என அழைக்கப்பட்டது. அதன் பின்னர் மணப்பாறை யூனியன் கிளப் என பெயர்மாற்றம் செய்யப்பட்டு காலி இடத்தினை மைதானமாக பயன்படுத்தப்பட்டது. வருவாய் துறையின் நில 'அ' பதிவேட்டின்படி மேற்கண்ட இடத்தினை "லோக்கல் பண்ட் ரீடிங் ரூம்" எனவும் மாற்றம் செய்யப்பட்டது. மேற்கண்ட இடத்தினை மனமகிழ்மன்றம் என்ற பெயரில் செயல்பட்டுவந்தது.<br>மேற்கண்ட மனமகிழ்மன்றத்தின் இடத்தினை கிளப்பின் செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் ஆக்கிரமைப்பு செய்து இடத்தினை கையகப்படுத்தியதால் தனி அதிகாரி மணப்பாறை நகராட்சி அவர்களால் 03.08.1978 -ல் நகராட்சிக்கு சொந்தமான சர்வே எண்- 584/5-ல் உள்ள 1.22 ஏக்கர் நிலத்தினை மணப்பாறை மனமகிழ்மன்றம் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும் அதனை திரும்ப நகராட்சியிடம் ஒப்படைப்பு செய்யுமாறு மனமகிழ்மன்றத்திற்கு அறிவிப்பு வழங்கப்பட்டது.<br>கரூர் சார்பு நீதிமன்றத்தில் மனமகிழ்மன்ற செயலாளரால் தொடரப்பட்ட அசல் வழக்கு எண்-44/83 தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பின்னர் வாதியால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்- 384/84 ல் அசல் வழக்கு எண்-44/83 ன் தீர்ப்பை உறுதி செய்து மேற்படி அசல் வழக்கு எண்- 384/84 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு நகராட்சிக்கு தீர்ப்பு | **தீர்மான எண்.37<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.** |

சாதகமாக வழங்கப்பட்டது.

அரசு செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அவர்களின் நேர்முக கடிதம் எண்.81/S.MAWS/97-1,நாள்-22.09.1997 -ல் உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி மணப்பாறை மனமகிழ்மன்றத்தினரால் ஆக்கிரமிப்பு செய்து வந்த இடத்தினை மணப்பாறை நகராட்சி வசம் கையப்படுத்தும் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி மற்றும் ஆணையர், மணப்பாறை நகராட்சி ஆகியோர்களுக்கு கடிதம் அனுப்பபட்டது. மேற்படி 1.22 ஏக்கர் இடத்தினை 18.11.1997-அன்று வருவாய் வட்டாட்சியர் முன்னிலையில் வருவாய் துறையினரால் பொறுப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் நகராட்சி வசம் ஒப்படைக்கவில்லை.

இந்நகராட்சிக்கு சொந்தமான மனமகிழ்மன்ற இடத்தினை நகராட்சி வசம் ஒப்படைக்கக்கோரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு இந்நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றி தொடர்ந்து கடிதம் அனுப்பியுள்ளது. மேற்படி இடத்தினை நில உரிமை மாற்றம் செய்யக்கோரி வட்டாட்சியர் மணப்பாறை அவர்களுக்கு 21.08.2006 ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நகர்மன்றத் தீர்மான எண்- 335, நாள்- 01.09.2006 ல் மணப்பாறை நகராட்சி நிதி நிலையை பெருக்கும் பொருட்டு மேற்படி இடத்தில் வணிக வளாகம் அமைக்க உத்தேசித்து இடத்தினை இலவசமாக வழங்க மாவட்ட ஆட்சித்தலைவரை கேட்டுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர் தனது ந.க.எண்: 4154978/2006 நாள்- 19.06.2007 ம் தேதிய கடிதத்தில் சர்வே எண்- 584/5 ல் 1.22 ஏக்கர் நிலத்தினை நகராட்சிக்கு நிலக்கிரயம் செலுத்தினால் மட்டுமே உள்ளாட்சிகளுக்கு நில உரிமை மாற்றம் செய்ய இயலும் என சென்னை சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்: பி2/13303/2007 நாள்- 24.05.2007 ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் சில விபரங்களை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

அதற்கு 17.07.2007 ல் நகர்மன்ற தீர்மானம் எண்- 257 ல் நகராட்சி நலன் கருதி இலவசமாக வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. மற்றும் வருவாய் நிலை எண்- 24(5), 24(6) கீழான விண்ணப்பம் 01.12.2008 ல் மாவட்ட ஆட்சி தலைவருக்கு அனுப்பப்பட்டது. நகராட்சிகள் நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களுக்கு மேற்கண்ட தகவல்கள் 17.12.2008-ல்

| | | |
|---|---|---|
| | தெரிவிக்கப்பட்டது.<br>சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை WP(MD)No.10551/2009 நாள்- 09.12.2009 (திரு.அழகப்பன் என்பவர் தொடர்ந்த பொது நல வழக்கு) தீர்ப்பில் மாவட்ட ஆட்சித்தலைவர், இப்பொருள் குறித்து முடிவு செய்ய வேண்டுமென உத்திரவிடப்பட்டுள்ளது.<br>மேற்படி உயர்நீதிமன்ற தீர்ப்பின் படி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு நகராட்சிகள் நிர்வாக இயக்குனர், சென்னை அவர்கள் தனது நே.மு.க.எண்.47860/2008/டிபி4 நாள்- 28.02.2007 மற்றும் 24.12.2010 ல் கடிதம் அனுப்பியுள்ளார்.<br>சிறப்பு செயலாளர் மற¦றும் நில நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு 05.07.2010 ஆம் தேதிய கடித எண் ந.க.எண்: 13303/2009-ல் மேற்படி இடத்தினை நகராட்சிகள் எந்த செயலுக்கும் அனுமதிக்க வேண்டாம் எனவும் நகராட்சி ஆணையரது கோரிக்கையை நிராகரித்தும் ஆணையிடப்பட்டுள்ளது.<br>மேற்படி இடம் குறித்து நகர்மன்றத் தலைவர் திருமதி.வீ.சாந்தா, அவர்கள் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் WP(MD)No.4108/2013வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, அரசு செயலாளர், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை நில நிர்வாக ஆணையர், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மணப்பாறை நகராட்சி ஆணையர் ஆகியோர்களை எதிர் மனுதாரராக சேர்த்து வழக்கு தொடரப்பட்டது.<br>இவ்வழக்கில் நீதிமன்றம் "The Petitioner is directed to move the govenent in this regard. The Petitioner may submit a comprehensive representation before the government.The Government is directed to take a decision thereon within two months from the date of receipt of a copy of the representation. If the Government comes to the conclustion that the original title vested with the Municipality, it shall restore it to the Manapparai Municipality" என தீர்ப்பு வழங்கியுள்ளது.<br>எனவே, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண்- 4108/2013 -ன் 07.09.2017 ம் தேதிய தீர்ப்புரை உத்தரவின் படி, மணப்பாறை நகராட்சிக்கு ஆரம்பகாலம் முதல் பூர்வீக உரிமையுள்ள சர்வே எண் 584/5 ல் உள்ள 1.22 ஏக்கர் இடத்தை நகராட்சி மணப்பாறை என்ற பெயருக்கு நிலஉரிமை மாற்றம் செய்து ஒப்படைப்பு செய்ய, நில நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள்மூலம் தகுந்த உத்தரவுகள் வழங்கும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், | |

| | | |
|---|---|---|
| | சென்னை அவர்கள் வழியாக கருத்துரு சமர்பிக்கப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி,அவர்களுக்கு சர்வே எண் 584/5 ல் உள்ள 1.22 ஏக்கர் இடத்தை நகராட்சி மணப்பாறை என்ற பெயருக்கு நிலஉரிமை மாற்றம் செய்து ஒப்படைப்பு செய்ய இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1688/2013/எப்1 நாள் 28.02.2022 ன் மூலம் கருத்துரு அனுப்பப்பட்டதில் மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி, அவர்களின் கடிதம் ந.க.ஆ4/29056/2000 நாள் 24.06.2022-ம் தேதிய கடிதத்தில் நிலஉரிமம் கோரப்பட்ட புலமானது நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளதால் பல்வேறு துறைகளிடமிருந்து நில உரிமை மாற்றம் செய்ய கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளதாகவும், மேலும் மேற்கண்ட புல எண்ணில் புதிதாக மணப்பாறை வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க கருத்துருக்கள் வரப்பெற்றுள்ளதால் மேற்கண்ட புலத்தை மணப்பாறை நகராட்சிக்கு நில உரிமம் மாற்றம் செய்துதர வழிவகையில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் பதிவு செய்யலாம்<br>2. சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கு எண் :4108/2013, நாள் : 07.09.2017 - ம் தேதிய தீர்ப்புரையில் வழங்கப்பட்ட உத்தரவின்படி சர்வே எண் : 584/5 - ல் உள்ள 1.22 ஏக்கர் இடத்தை "நகராட்சி ஆணையர், மணப்பாறை" என்ற பெயருக்கு நில உரிமை மாற்றம் செய்து ஒப்படைக்க கோரி அரசிற்கு நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் மூலமாக உரிய கருத்துரு சமர்ப்பித்து நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 20.10.2022 | **பொருள் – 11**<br>மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட செவலூர் கிராமம், விடத்திலாம்பட்டியில் சர்வே எண்.334/1 தொகுதி (வார்டு) - A பகுதி (பிளாக்)-2 நகர புல எண் (T.S.No)-4/6 -ல் , 2.32 ஏக்கர் ( 9426.00 ச.மீ) பரப்பளவில் அமையும் "**MJM தென்றல் நகர்**" குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, நகர் ஊரமைப்பு இணை இயக்குனர் ,திருச்சிராப்பள்ளி அவர்களின் ந.க.எண் :TRY/SWP-ELEIAVN/1812/2022 அவர்களின் நாள். 26.07.2022 தேதிய உத்தரவில் சாலை அமைப்பு | **தீர்மான எண்.38**<br>**அலுவலகக்குறிப்பு**<br>**பதிவு செய்யப்பட்டது**<br>திருமதி.மு.வசந்தா தேவி 14 வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது |

<table>
<tr>
<td></td>
<td>வரைபடம் வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேலும் மேற்படி மனைப்பிரிவிற்கு 26.07.2022-ல் மேற்படி அலுவலகத்தால் ம.வ./ந.ஊ.இ.இ(தி.மா) .எண்:83/2022-ல் தொழில்நுட்ப அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவ்வரைபடத்தில் மேற்கண்ட அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டதின் பேரில், மனுதாரரால் மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள், மூலைமுடக்குகள் (3210.63ச.மீ), பூங்கா ஒதுக்கீட்டிற்கு பதிலாக அரசு வழிகாட்டு மதிப்பீட்டு தொகை செலுத்தப்பட்டுள்ளது. உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு (31.35 ச.மீ) மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான உபயோக இடம் (31.35 ச.மீ) ஆகிய இனங்கள், நகராட்சி ஆணையர் பெயரில் தானப்பத்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டு வருவாய் ஆவணங்களில் நகராட்சி ஆணையர் பிரிவில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. தானப்பத்திர அசல் ஆவண எண்.5060/2022 விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக்குறிப்பு:-</u><br>மன்றம் பதிவு செய்யலாம்<br>(ந.க.எண்.1365/2022/எப்1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>20.10.2022</td>
<td>பொருள் – 12<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு தற்போது பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள பழைய தளவாட சாதனங்கள் மற்றும் தளவாட உபகரணங்களை கழிவு செய்ய குழு நிர்ணயம் செய்து ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட பொருட்கள் உபயோகமற்ற நிலையில் உள்ளதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பொருட்கள்</th><th>எண்ணிக்கை</th></tr>
<tr><td>1.</td><td>தகர டப்பா</td><td>26</td></tr>
<tr><td>2.</td><td>பழைய சேர்</td><td>35</td></tr>
<tr><td>3.</td><td>சிறிய மற்றும் பெரிய டயர்</td><td>200</td></tr>
<tr><td>4.</td><td>ட்ரைசைக்கிள்</td><td>22</td></tr>
<tr><td>5</td><td>தள்ளுவண்டி</td><td>32</td></tr>
<tr><td>6</td><td>காம்பாக்டர் பின்</td><td>35</td></tr>
<tr><td>7</td><td>குப்பைத் தொட்டி சிறியது</td><td>50</td></tr>
<tr><td>8</td><td>குப்பைத் தொட்டி பெறியது</td><td>50</td></tr>
<tr><td>9</td><td>நடமாடும் கழிப்பறை</td><td>2</td></tr>
</table></td>
<td>தீர்மான எண்.39<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது<br>திருமதி.மு.வசந்தா தேவி 14 வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட பழுதான உபயோகமற்ற தளவாடங்கள் மற்றும் உபகரணங்களை பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1902/2022/எச்1) | |
| 20.10.2022 | **பொருள் – 13**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணியில் வீடுகள், வணிக நிறுவனங்கள், பேருந்த நிலையம், வாரச்சந்தை, காய்கறி வாரச்சந்தை மற்றும் மாட்டுச்சந்தை பகுதியிலிருந்து தினந்தோறும் உருவாகும் கழிவுகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக தரம் பிரித்து வாங்கி உரமாக்கும் மையத்திற்கு கொண்டு செல்ல 10 BOV வாகனம் மற்றும் 4 LCV வாகனம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் தினந்தோறும் நகர் பகுதியில் உள்ள கழிவுநீர் வடிகால் மற்றும் மழைநீர் வடிகாலில் இருந்து எடுக்கப்படும் மண் மற்றும் நகரில் சேரும் மரக்கிளைகளை அகற்றுவதற்கு இந்நகராட்சியில் தனியாக வாகனம் ஏதும் இல்லை. தற்போது இப்பணிக்கும் LCV வாகனம் இதற்காக பயன்படுத்தப்படுகிறது. மேற்படி பொருட்களை ஏற்றுவதால் LCV வாகனம் பழுது ஏற்பட்டு திடக்கழிவு மேலாண்மை பணி தொய்வு ஏற்படுகிறது.<br>மதிப்பிற்குரிய கரூர் பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி 2020-21-ல் இருந்து கொரோனா தடுப்பு பணிக்கென ஒரு டிராக்டர் மற்றும் மருந்து தெளிப்பான் வாகனம் வழங்கப்பட்டது. தற்போது கொரோனா நோய் தொற்று குறைந்துள்ளதால் மேற்கண்ட டிராக்டர் வாகனம் பயன்பாடின்றி நகராட்சி அலுவலகத்தில் உள்ளது. மேற்கண்ட வாகனத்திற்கு ட்ரெயிலர் ஒன்று இருந்தால் நகர் பகுதியில் உருவாகும் கழிவுநீர் வடிகால் மற்றும் மழைநீர் வடிகாலில் இருந்து எடுக்கப்படும் மண் மற்றும் மரக்கிளைகளை அகற்றுவதற்கும், திடக்கழிவு மேலாண்மை பணிக்கும் இன்றியமையாததாக இருக்கும். மேற்கண்ட ட்ரெயிலர் வாங்குவதற்கு நகர் பகுதியில் உள்ள வங்கிகள், மருத்துவமனைகள் மற்றும் தன்னார்வலர்களிடமிருந்து சமூக பங்களிப்பு நிதி **(CSR)** கோரியதில் மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து ரூ.1.53 இலட்சம் வரப்பெற்றுள்ளது. இந்நிதியிலிருந்து நகராட்சியில் உள்ள டிராக்டருக்கு ஒரு ட்ரெயிலர் வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1941/2021/எச்1) | **தீர்மான எண்.40**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**<br>திருமதி.மு.வசந்தா தேவி 14 வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது |

20.10.2022

**பொருள் – 14**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வந்த இலகுரக வாகனம் TN45 CZ 0358-ல் பழுது ஏற்பட்டு இயக்க முடியாத நிலை ஏற்பட்டது. மேற்படி வாகனத்தை பழுது நீக்கம் நீக்கம் செய்வதற்கு 12.10.2022-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பைப்பாஸ் ரோடு, பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை | ரூ.23,650/- |
| 2 | ஓம் முருகா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பைப்பாஸ் ரோடு, பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை | ரூ.24,050/- |
| 3 | அன்னை ஆட்டோ கேரேஜ், பைப்பாஸ் ரோடு, பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை | ரூ.24,300/- |

<u>அலுவலகக்குறிப்பு :-</u>

1. மேற்படி வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை நிறுவனம் குறைந்த விலைவிகிதம் ரூ.23650/- கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்கலாம்.
2. செலவினத் தொகையை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
3. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி மேற்படி வாகனத்தை பழுது நீக்கம் செய்ய உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1925/2022/எச்1)

**தீர்மான எண்.41**
**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| 20.10.2022 | **பொருள் – 15**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வந்த இலகுரக வாகனம் TN45 CZ 0344 -ல் பழுது ஏற்பட்டு இயக்க முடியாத நிலையிலுள்ளது. மேற்படி வாகனத்தை பழுது நீக்கம் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட டாடா டீலர் செல்லம் மோட்டார்ஸ், திருச்சி நிறுவனம் மூலம் பழுது நீக்கம் செய்யவும் அதற்கான தொகை ரூ.64,000/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. செலவினத் தொகையை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br>3. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி மேற்படி வாகனத்தை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் பழுது நீக்கம் செய்ய உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1806/2022/எச்.1) | **தீர்மான எண்.42**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**<br>திருமதி.மு.வசந்தா தேவி 14 வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது |
| 20.10.2022 | **பொருள் – 16**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்காக பொது மக்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்குவதற்கு தேவையான நிலவேம்பு பவுடர் அரசு நிறுவனமான டாம்ப்கால், சென்னை (Tampcol) நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/-ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :-**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.19029/2022/எச்1) | **தீர்மான எண்.43**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 20.10.2022 | **பொருள் – 17**<br>மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் 22.09.20222-ம் தேதிய ஆய்வுக்கூட்டத்தில் மணப்பாறை நகர்பகுதியில் டெங்கு காய்ச்சல், லெப்டோஸ்பைரோசிஸ், H1N1 வைரஸ் காய்ச்சல் போன்றவை நகர்ப்பகுதியில் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள வேண்டும் அதற்காக கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ள வேண்டும், புகை மருந்து தெளித்து அதன் விபரத்தை அறிக்கை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு நகராட்சியில் உள்ள புகைமருந்து தெளிப்பான் பழுதடைந்துள்ளதால் புதிதாக Portable Thermal Fogging Machine-2 (Outdoor), Fogging Machine-2 (indoor), Gas Cylinder-300 அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான திமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வீஸ் சொசைட்டி நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1901/2022/எச்1) | **தீர்மான எண்.44**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**<br>திருமதி.மு.வசந்தா தேவி 14 வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது |
| 20.10.2022 | **பொருள் – 18**<br>மணப்பாறை நகராட்சி பொது சுகாதார பிரிவில் வார்டு எண்.15-ல் உள்ள சேதுரெத்தினபுரம் மற்றும் மலையாண்டித் தெருவில் உள்ள சமுதாய கழிப்பறை கழிவுநீர் நச்சுத்தொட்டி சுத்தம் செய்யும் பணி மேற்கொண்ட வகையில் செலவினத் தொகை ரூ.10,000/-ஐ தினேஷ் செப்டிக் டேங்க் கிளீனிங், மதுரை ரோடு,மணப்பாறை என்ற நிறுவனத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1926/2022/எச்1) | **தீர்மான எண்.45**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**<br>திருமதி.மு.வசந்தா தேவி 14 வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது |

<table>
<tr>
<td>20.10.2022</td>
<td>

**பொருள் – 19**

இந்நகராட்சி கணினி பிரிவில் பயன்படுத்தப்பட்டு தற்போது பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள கணினி மற்றும் கணினி சார்ந்த உபகரணங்களை கழிவு செய்வதற்கு Information Techonology (e-Gov.II) Department G.O.No.9, Dated.23.04.2013-ன்படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9514/2022/தூ.இ.தி2, நாள்.08.06.2022-ன்படியும், Public Department Letter No.875/Special-B/2020-21-2. Dated.09.06.2021-ன்படியும், ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்டு பழுதடைந்துள்ள நிலையில் பழுது நீக்கம் செய்ய இயலாது என்றும் அதற்கு உண்டான உதிரி பாகங்கள் கிடைக்காத நிலையிலும் தற்சயம் உள்ள மென்பொருட்களை நிறுவ இயலாத நிலையில் உள்ள காரணத்தினாலும் பயனற்றவைகளை E- Waste செய்யாலாம், என ஆண்டு பராமரிப்பு நிறுவனமாகிய SUMARAJ IT SOLUTIONS சான்று வழங்கியுள்ளது. கீழ்க்கண்ட உபகரணங்கள் உபயோகமற்ற நிலையில் உள்ளதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | SERVER-1 | 1 |
| 2. | DESKTOP-15 | 15 |
| 3. | DOT MATRIX | 7 |
| 4. | LASER PRINTERS | 9 |
| 5 | DESKJET PRINTER | 1 |
| 6 | UPS | 7 |
| 7 | SCANNER | 1 |
| 8 | XEROX CUM PRINTER -1 | 1 |
| | **Total** | **42** |

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.16914/2016/P3, நாள்.13.06.2019-ல், பழுதான உபயோகமற்ற மின் உபகரணங்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனத்திடம் வழங்கி உபகரணங்களை அப்புறப்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கண்ட பொருட்களை சம்மந்தப்பட்ட நிறுவனத்திடம் வழங்கி அதற்கான அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வரவு வைக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1908/2022/அ1)

</td>
<td>

**தீர்மான எண்.46**
**அலுவலகக்குறிப்பு**
**அனுமதிக்கப்பட்டது.**
திருமதி.மு.வசந்தா தேவி 14 வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது

</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 20.10.2022 | **பொருள் – 20**<br>இந்நகராட்சியில் 2022-23-ம் ஆண்டில் பொது சொத்துவரி சீராய்வு 01.04.2022-ம் தேதி முதல் நிர்ணயம் செய்யப்பட்டு உரிய ஆவணம் தயார் செய்ய வேண்டியுள்ளது. இதற்கான எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள், டோனர்கள் , கணினி ரசீதுகள் வாங்கவும், Refill டோனர்கள் வாங்கவும், டோனர்களை Refill செய்யவும் மற்றும் அலுவலகத்திற்கு தேவையான இதர எழுது பொருட்கள் வாங்கவும் உள்ளூர் மற்றும் திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்டிகோ சர்வ் கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் ரூ.10,00,000/- (பத்து இலட்சம்)-க்கு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1807/2022/பி3) | **தீர்மான எண்.47**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

**(ஒம்) கீதா.ஆ.மைக்கேல்ராஜ்**
**நகர்மன்றத் தலைவர்**
**மணப்பாறை நகர்மன்றம்**